## மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர் - 5

தே.நெ.அ.சுற்.எண்: 04 / 2021 – 2022 நாள்: 16.07.2021

**சுற்றறிக்கை**

ஏப்ரல் 2021 தேர்வுகள் வரையிலான மாணவர்களின் அனைத்து மதிப்பெண் சான்றுகளும் துறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவற்றைக் கீழ்கண்டவண்ணம் பெற்றுக்கொள்ள மாணவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

1. 2020 - 21 கல்வியாண்டில் இறுதிப் பருவத்தேர்வுகளை எழுதிய III UG & II PG மாணவர்கள் துறைத்தலைவர்கள் குறிப்பிடும் நாள்களில் நேரில்வந்து நிலுவையில் உள்ள அனைத்துப் பருவச் சான்றுகள் மற்றும் தொகுப்பு மதிப்பெண் (Consolidated mark sheet) சான்றுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

2. ஏப்ரல் 2021 பருவத்தேர்வுகளுக்கு தேர்வுக் கட்டணம் செலுத்தாத III UG & II PG மாணவர்கள் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்தி, நேரடியாகத் தேர்வு நெறியாளர் அலுவலகத்திலிருந்து தொகுப்பு மதிப்பெண் (Consolidated mark sheet) சான்றுகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

3. நவம்பர் 2020 -ல் நிலுவைத்தாள்கள் தேர்வு எழுதி UG / PG முடித்த மாணவர்களுக்கு மதிப்பெண் சான்றுகள், தொகுப்பு மதிப்பெண் (Consolidated mark sheet) மற்றும் தற்காலிக பட்டச் சான்றுகளைத் (Provisional Certificate) துறைகளிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

4. **2019-20 கல்வியாண்டில் நிலுவைத் தாள்களுக்குத் தேர்வின்றிக் குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு பிப்ரவரி 2021-ல் துணைத்தேர்வுகள் (Supplementary Exams) நடத்தப்பட்டன. அவர்களுக்கான திருத்தப்பட்ட பருவச்சான்றுகள், திருத்தப்பட்ட தொகுப்பு மதிப்பெண் (Consolidated mark sheet) மற்றும் தற்காலிக பட்டச் சான்றுகளை (Provisional Certificate) நேரடியாக தேர்வு நெறியாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. குறித்த மாணவர்கள் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட இறுதிப்பருவ மதிப்பெண் சான்று மற்றும் தொகுப்பு மதிப்பெண் (Consolidated mark sheet) -ஐ அவசியம் எடுத்துவர வேண்டும்.**

5. 2020-21 கல்வியாண்டில் I UG & II UG மற்றும் I PG பயின்ற மாணவர்கள் கல்லூரித் திறப்பு நாளன்று துறையிலிருந்து தத்தமது நிலுவையில் உள்ள அனைத்துப் பருவத்தேர்வு மதிப்பெண் சான்றுகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

16.7.2021

தேர்வு நெறியாளர்

தேர்வு நெறியாளர்
மன்னர் சரபோஜி அரசு கல்லூரி (தன்னாட்சி)
தஞ்சாவூர்-613 005.

16/7/21

முதல்வர்

முதல்வர்
மன்னர் சரபோஜி அரசு கல்லூரி (தன்னாட்சி)
தஞ்சாவூர்-613 005.

பெறுநர்:

அனைத்துத் துறைத்தலைவர்கள்.